செய்தி வெளியீடு எண்: 054 நாள் : 02.02.2015

# செய்தி வெளியீடு

## இந்து சமய அறநிலையத் துறை

## பேரறிஞர் அண்ணா நினைவு நாள் – 3.2.2015
## சிறப்பு வழிபாடு மற்றும் பொது விருந்து

ஆண்டுதோறும் முக்கிய திருக்கோயில்களில் அனைத்து சமுதாய மக்களும் பங்குபெறும் வகையில் **பேரறிஞர் அண்ணா நினைவு நாளன்று சிறப்பு வழிபாடு மற்றும் பொது விருந்து** நடத்தப்படுகின்றது. இவ்வாண்டு, மாநிலத்தில் **309** திருக்கோயில்களில் சிறப்பு வழிபாடு மற்றும் பொது விருந்து **3.2.2015** செவ்வாய்க்கிழமை அன்று **மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா** அவர்களது வழிகாட்டுதலின்படி சிறப்புடன் நடைபெறவுள்ளது.

சென்னை திருவான்மியூர், அருள்மிகு மருந்தீஸ்வரர் திருக்கோயிலில் நடைபெறும் பேரறிஞர் அண்ணா நினைவுநாள் சிறப்பு வழிபாடு மற்றும் பொது விருந்து நிகழ்ச்சியில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. ஓ.பன்னீர்செல்வம் அவர்களும், சென்னை திருவொற்றியூர், அருள்மிகு தியாகராஜசுவாமி திருக்கோயிலில் பேரறிஞர் அண்ணா நினைவுநாள் சிறப்பு வழிபாடு மற்றும் பொது விருந்து நிகழ்ச்சியில் மாண்புமிகு தமிழ்நாடு சட்டப்பேரவைத் தலைவர் திரு. ப. தனபால் அவர்களும் கலந்து கொண்டு சிறப்பிக்க உள்ளார்கள்.

சென்னையிலும் மாநிலத்தின் பிற இடங்களிலும் திருக்கோயில்களில் நடைபெறும் பேரறிஞர் அண்ணா நினைவு நாளையொட்டிய சிறப்பு வழிபாடு மற்றும் பொது விருந்து நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சியர்கள் மற்றும் மக்கள் பிரதிநிதிகள் கலந்து கொண்டு சிறப்பிக்க உள்ளார்கள்.

பேரறிஞர் அண்ணா நினைவு நாளையொட்டி நடைபெறும் சிறப்பு வழிபாடு மற்றும் பொது விருந்து நிகழ்ச்சியில் அனைத்து சமுதாய மக்களும் பங்குபெற்று சிறப்பிக்க வேண்டப்படுகிறது.

**வெளியீடு:**
**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**